Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 203/2024 PW-4**

Name : அபரஞ்சி
Father / Husband name : கணபதி
Village : கீழ்மாவிலங்கை
Age : 71
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 13.03.2026

A1 to A2 present. Defence counsel present. HC 1465 present.

**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எங்கள் ஊரில் திருவிழாசம்மந்தமாக நடந்த கூட்டத்தில் நான் கலந்து கொண்டேனா என்றால் கலந்துகொண்டேன். அந்த கூட்டத்தில் சுமார் 20, 30 நபர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். அந்த கூட்டத்தில் 1வது எதிரி கணக்கு கேட்டதால் பிரச்சனை நடந்தது என்றால் சரிதான். அதனால் அங்கிருந்த 30, 40 நபர்கள் அடித்துவிட்டாகள் என்றால் கூச்சல் சத்தம் கேட்டது, நான் அங்கிருந்து வந்துவிட்டேன். சம்பவம் நடந்த அன்று இரவு போலிசார் வந்தார்களா என்றால் இல்லை, மறுநாள் வந்தார்கள். சம்பவம் சம்மந்தமாக புகார் கொடுக்க நான் காவல் நிலையம் சென்றேனா என்றால் இல்லை. போலிசாரிடம் நான் விவரத்தை சொல்லி வரைபடம் வரைந்தார்களா என்றால் அவர்கள் கேட்டார்கள் நான் சொன்னேன். நான் சொல்லி எழுதினார்களா என்றால் இல்லை, ஏற்கனவே எழுதியிருந்தார்கள். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் குற்ற எண் தெரியுமா என்றால் தெரியாது. அதனை என்னிடம் படித்துக்காண்பித்தார்களா

என்றால் இல்லை. அன்றையதினம் விசாரித்தபிறகு போலிசார் மீண்டும் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. சம்பவம் நடந்த மறுநாள் அ.சா.1 வுடன் சேர்ந்து காவல் நிலையம் சென்றபோது அங்கு தான் இந்த கையொப்பத்தை செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.